NP/09/FRM/2007 01.07.2007

**மாகாணத் திறைசேரி சுற்றுநிருபம் இல:- PT/19/2007**

செயலாளர்கள்,

பிரதிப் பிரதம செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள்,

வட மாகாணம்.

**<u>அலுவலர்களுக்கென இணைப்புச் செய்யப்பட்டுள்ள</u>**

**<u>உத்தியோகபூ ர்வ வாகனங்களுக்கான எரிபொருள் பாவனை.</u>**

மேற்படி விடயம் சம்பந்தமாக கௌரவ ஆளுநர் அவர்களின் 06/2007ம் இலக்கமும் 19.04.2007ம் திகதியும் கொண்ட அறிவுரைக் கடிதத்தின்(Memo) மீதும் 11/2006ம் இலக்கமும் 14.07.2006ம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் மீதும் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. உத்தியோகபூ ர்வ வாகனம் ஒன்று அலுவலர் ஒருவருக்கு இணைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அவர் 11.:.2006ம் சுற்று நிருபத்தின் பிரகாரம் அவ்வாகனப் பாவனையை மேற்கொள்ளல் வேண்டும். தங்கள் இலகு பார்வைக்காக அச் சுற்று நிருபத்தின் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

3. மேற்படி சுற்றுநிருபத்தின் பிரகாரம் மாதாந்தம் **<u>தத்தமது சம்பளத்துடன் வழங்கப்படும்</u>** எரிபொருளுக்கான படியானது தனிப்பட்ட முறையில் வாகனம் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தருக்கு வழங்கப்படுவதால், அத்தொகைக்கு உட்பட்டு செலவை மேற்கொள்வது அவ்வவ் உத்தியோகத்தரின் பொறுப்பாகும். எனவே எரிபொருள் நிரப்புவதும் அவரைச் சார்ந்ததே. இதற்கு வாகன ஓட்டப் புத்தகத்திற்கு பதிலாக 11/2006ம் சுற்றுநிருபத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு ஐஐ ல் உள்ள மாதிரிப் படிவத்தைப் பேணுதல் வேண்டும்.

4. அவருக்கு வழங்கப்படும் மேற்படி படியானது அவரது நாளாந்த காரியாலய கடமைகளை மேற்கொள்வதற்கும், அவரது தனிப்பட்ட உபயோகத்திற்காகவுமே வழங்கப்படுகின்றது.

5. **<u>விசேட கடமைகளின் நிமித்தம்</u>** அவர் தமக்கு இணைக்கப்பட்ட வாகனத்தை பாவிக்கும்போது அதற்கென விசேடமாக எரிபொருள் தேவைப்படின் 11/2006ம் சுற்றுநிருபத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு 111 ல் காட்டப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தில் பிரதம செயலாளரின் அனுமதியைப் பெறுதல் அவசியம். அப்படிவத்துடன் தமது வெளியிடங்களிற்கு செல்வதற்கான அனுமதி விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ள விபரங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

5.1 விசேட கடமைகளின் நிமிர்த்தம் அனுமதி பெற்று **<u>இணைக்கப்பட்ட வாகனத்தை பாவிக்கும் சந்தர்ப்பத்தில்</u>** அது தொடர்பில் உண்மையாக செலவாகிய எரிபொருள் செலவை மீளப் பெறுவதற்கு பிரதம செயலாளரின் அனுமதியைப் பெறவேண்டும்.

தமக்கு இணைக்கப்பட்டுள்ள வாகனத்தை விசேட கடமைக்காக பாவிக்கும் போது சுற்றறிருபத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு 11ன் மாதிரியையே தொடர்ந்தும் பேணுதல் வேண்டும்.

**<u>பொது வாகனத்தை</u>** விசேட தேவைக்கு பாவிப்பதாயின் குறிப்பிட்ட வாகனத்திற்கென பாவித்துக்கொண்டிருக்கும் வாகன ஓட்டப் புத்தகத்தையே பாவிப்பதுடன் எரிபொருளும் வழமையாகப் பெறும் முறையிலேயே பெறுதல் வேண்டும்.இச் சந்தர்ப்பத்தில் வழமையான அனுமதி நடைமுறை பின்பற்றப்படல் வேண்டும்.

கௌரவ ஆளுனரின் 28.06.2007ம் திகதி சுற்றுநிருபத்தில் கூறப்பட்டதன் பிரகாரம் விசேட கடமைகளிற்கு **<u>தனிப்பட்ட முறையில்</u>** சமூகம் அளிக்கவேண்டி ஏற்பட்டாலொளிய வேறு தமது நிறுவனத்தில் கடமையாற்றும் **<u>தகுதியுள்ள ஒரு பதவி நிலை</u> <u>உத்தியோகத்தரை</u>** அனுப்புதல் வேண்டும்.

6. எது எவ்வாறாயினும் தத்தமது திணைக்களத்திற்கென எரிபொருள் நிமித்தம் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக செலவு செய்யாதிருப்பதை கண்டிப்பாக உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

7. பொதுநிர்வாக சுற்றுநிருபம் 22/99(IV)ன் பிரகாரம் வாகனங்கள் இணைப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் அச் சுற்றுநிருபத்தில் குறிப்பிட்ட தொகையை மாதாந்தம் தமது சம்பளத்தில் இருந்து அறவிடுவது அவசியமாகும்.

8. முறையாக பிரதம செயலாளரின் அனுமதி பெறப்பட்ட வாகனங்களே இணைப்புச் செய்யப்பட்ட வாகனங்களாக கருதப்படும்.பொது நிர்வாக சுற்றுநிருபம் 22/99ன் பிரகாரம் இணைக்கப்பட்ட வாகனங்களுக்கு தகுதியுள்ள மாகாண திணைக்களத் தலைவர்களும் தாம் தமது காரியலய பாவனைக்கு பாவித்துக் கொண்டிருக்கும் வாகனங்களை **<u>பிரதம செயலாளரின் அனுமதியைப் பெற்று</u>** இணைக்கப்பட்ட வாகனங்களாக பாவித்தல் வேண்டும்.

9. சம்பளத்துடன் வழங்கப்படும் எரிபொருளுக்கான படியும் (Allowance) 1202 என்ற வாக்குத் தலைப்பிலேயே (எரிபொருட்செலவு)வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

10. விழாக்கள், பொது வைபவங்கள், திறப்பு விழாக்கள் போன்றவற்றிற்கு கலந்து கொள்வதாயின் அவற்றிற்கு விசேட அனுமதி வழங்கப்பட மாட்டாது.

11. மேற்படி நடைமுறை 09.07.2007ல் இருந்து அமுல்ப்படுத்தப்படும்.

சி.ரங்கராஜா
பிரதம செயலாளர்.

பிரதிகள்:-

1. ஆளுநரின் செயலாளர் - வமா
2. செயலாளர், மாகாணப் பொதுநிர்வாக அமைச்சு – வமா
3. பிரதிப் பிரதம செயலாளர் - உள்ளகக் கணக்காய்வு – வமா
4. கணக்காய்வாளர் நாயகம்

} தகவலுக்காக